# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 78 — 1973 සැප්තැම්බර් 21 වැනි සිකුරාදා — 1973.09.21

78 ஆம் இலக்கம் 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப்பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 965 | பரீட்சைகளும், பரீட்சைப்பெறுபேறுகளும் பிறவும் ... | 982 |


*கவனிக்க.—தேசிய சுவடிக்கூடம் சட்டமூலமும் நிதி சட்டமூலமும், தேசிய நீர்வழங்கல், வடிகால், சேவைகள் சபை சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

### முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 த் உ.*

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகூர் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகூர் காலம் நிறைவு எய்தியதினும் பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும், அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகூர் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்தகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாவது மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாவது 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், இயக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 · 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

*கிராமத் திட்டவமைப்புக் கட்டடக் கலைஞர் பதவி*

நீர்ப்பாசன மின்சக்தி பெருவீதிகள் அமைச்சின் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கிராமத் திட்டவமைப்புக் கட்டக் கலைஞர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு செயலாளர், நீர்ப்பாசன மின்சக்தி பெருவிதிகள் அமைச்சு, அ. பெ. 512, கொழும்பு 1 அவர்களை பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கிராமத் திட்டவமைப்புக் கட்டடக் கலைஞர் பதவி" என்னும் வார்த்தைகள் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1973 நொவம்பர் மாதம் 5 ஆம் திகதி

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1973 நொவம்பர் மாதம் 5 ஆம் திகதி

குறிப்பு

(அ) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்குச் சமீபமாகவுள்ள இலங்கைப் பிரதிநிதிக்கு நீர்ப்பாசன மின்சக்தி பெருவீதிகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பி வைக்கலாம்.

(ஆ) **மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெறும் பொருட்டு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களா என்பதை உறுதிப்படுத்தும் முகமாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ உத்தியோகத்தரிடம் மருத்துவச் சோதனையொன்றுக்குட்படுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணஞ் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே செலுத்துதல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியச் சம்பளமற்றதுமாகும். அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவுபணம் செலுத்துதல் வேண்டும். ஏற்கனவே நிரந்தரமானதும் ஓய்வூதியச் சம்பள முடையதுமான பதவியை வகிக்கும் ஒருவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் அவரது ஓய்வூதியச் சம்பள நிலை மாற்றமடையாது.

3. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—ஆண்டொன்றுக்கு ரூபா 17,040—3 × 600—ரூபா 18,840 (இதற்குச் சமமான 1969.10.1 ஆம் திகதிக்கு முன்னர் உள்ள அடிப்படைச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 13,800—3 × 600—ரூபா 15,600 ஆகும்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று அவர்—

(அ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 நொவம்பர் மாதம் 5 ஆம் திகதியன்று 35 வயதிற்கு குட்படாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் (அரசாங்க சேவையிலோ அல்லது கூட்டுத்தாபனங்களிலோ நிரந்தர நியமனங்களை வகிப்பவர்கட்கு இவ்வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.)

(இ) (1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் கட்டடக் கலைப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) பிரித்தானியக் கட்டடக் கலைஞர் அரசநிறுவகத்தின் கூட்டு உறுப்பினர் அல்லது அவுஸ்திரேலிய அரச கட்டடக் கலைஞர் நிறுவனத்தின் கூட்டு உறுப்பினராக விருத்தல் வேண்டும்.

(3) பத்து வருட காலம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு (இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரிச் சிற்றாசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.)

(ஈ) உயர் தொழில் தகைமையும் தொழில் நுட்பத் தகைமையும் அல்லது தொழில் நுட்பத் தகைமை அல்லது உயர் தொழில் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த அதி உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு

(அ) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(ஆ) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

6. அரசாங்கத்திலும் கூட்டுத்தாபனங்களிலும் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்கள, கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பும் திகதியை நீர்ப்பாசன, மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர் நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு, என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயொழிய இத்திணைக்களத்திலுள்ள வேறு எவ்வுத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

ரி. சிவஞானம்,
மே. செயலாளர் (பரிபாலனம்) செயலாளருக்காக,
நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு.

அஞ்சல் பெட்டி 512,
நீர்ப்பாசன மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1973 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 7 ம் நாள்.

**கிராமத் திட்டவமைப்புக் கட்டடக் கலைஞர் பதவிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. நிரந்தர முகவரி :————.

3. (அ) பிறந்த திகதி :————.
(ஆ) 1973 நொவம்பர் 5 அன்றுள்ளபடி வயது :————.
வருடம் :————. மாதம் :————. நாள் :————.

4. சாதியம் :————.
(அ) இலங்கையராயின் வம்சாவழி காரணமாகவோ அல்லது பதிவு காரணமாகவோ :————.
(ஆ) வம்சாவழி இலங்கையராயின் பின்வருவோர் பிறப்பிடம் :—
(i) விண்ணப்பதாரி :————.
(ii) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(iii) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(iv) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

5. (அ) பால் :————.
(ஆ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா :————.

6. கல்வித் தகைமைகளும் உயர் தொழிற் தகைமைகளும் :—

7. சித்தி எய்திய உயர் பரீட்சை.—
(1) சிங்களத்தில்
(2) தமிழில்
(3) ஆங்கிலத்தில்

8. நீர் பணமுட்டு அற்றவரா :————.
பணமுட்டு உமக்கு இருப்பின் எவ்வளவிற்கு :————.

9. சட்டமுறை நீதி மன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா? அவ்வாறாயின் திகதிகளுடன் வழக்கு எண்களும் முழுவிபரமும் தருக.—

10. தற்போதைய தொழிலும் முன்னர் வகித்த பதவியும், ஏதும் இருப்பின் விபரம் தரவும் :—

11. வேறு ஏதும் விபரங்கள் :——

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நட்டஈடின்றி விலக்கப்படுதற்கு பாத்திரமாவேன் என்பதை அறிவேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

9—530—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78.

---

**சுகாதார அமைச்சு**

**சுகாதார திணைக்களத்தில் சுகாதார கல்வி உத்தியோகத்தர் பதவி**

சுகாதார திணைக்களத்தில் சுகாதார கல்வி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பப்பட்டு 12.10.1973 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்கான சம்பள விகிதம் ஆண்டொன்றுக்கு 6,720—12 × 360—11,040.

3. **நியமன நியதிகள்.**—பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் அற்றதுமாகும் அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவுதொகைகள் செலுத்தப்படும். ஓய்வூதிய உரிமையுடைய ஓர் அரசாங்க உத்தியோகத்தர் தேர்வு செய்யப்பட்டால், 24.12.71 இன் 41 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாயிருக்கும்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குச் சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) 12.10.1973 இல் 20 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல். இவ்வயதெல்லை ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்க்கு ஏற்புடைத்தன்று.

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருத்தல் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் ஒரு பட்டதாரியாக இருத்தல்.

**குறிப்பு.**—பின்வரும் தகைமைகளை உடைய வேட்பாளர்களுக்கு முன்னிடம் தரப்படும் :—

(i) சிங்களத்திலும் தமிழிலும் சிறந்த அறிவு பெற்றிருத்தல் ;

(ii) சமூகவியல், உளவியல், சமூக மனிதரியல், கல்வி போன்ற சமூக இயல்களில் அல்லது இயற்கை இயல்களில் சித்தி பெற்றிருத்தல்.

(iii) அரசாங்கத்தில் அல்லது அங்கீகாரம் பெற்ற தொண்டு நிறுவனத்தில் சம்பளம் பெற்ற ஊழியராக இருந்து, கல்வி, சமூக சேவை, அல்லது சுகாதாரப் பணி போன்றவற்றில் அனுபவம் பெற்றிருத்தல்.

5. **சேவை நிபந்தனைகள்.**—தேர்வு செய்யப்படும் வேட்பாளர் புதிதாக அரச சேவையில் சேர்பவராகவும், உத்தியோக மொழித் தேவைகளை நிறைவேற்ற வேண்டியவராகவும் இருப்பின்,

(அ) நியமனம் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் நிலையிலிருக்கும். அரச சேவையில் ஏற்கனவே உள்ளவர்களது நியமனம் ஒரு வருட காலத்துக்குப் பதில் அடிப்படையில் இருக்கும். அவர் இப்பதவியில் பதில் கடமை பார்க்கும் போது திருப்திகரமற்றவராகக் காணப்படின், அவரது முன்னைய பதவிக்கு மீளவும் அனுப்பப்படுவார்.

6. ஏலவே அரச சேவையில் உள்ள வேட்பாளர்கள், தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் இந்த அனு

வலகத்துக்கு வந்து சேரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

7. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்தனுப்புதல் வேண்டும்.

(அ) அதியுயர்ந்த கல்வி, உயர்தொழிற் தகைமைகளது சான்றிதழ்.

(ஆ) இப்பதவிக்கு விண்ணப்பதாரரின் குணமும் தகுதியும் பொருத்தமானவை என்பதற்கான அண்மைக்கால மூன்று நற்சான்றிதழ்கள். (ஏற்கனவே அரச சேவையில் உள்ள வேட்பாளர்கள், இந்த உப பிரிவின்படி நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.)

8. விண்ணப்பங்கள் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமே தவிர தனிப்பட்ட முறையில் எனக்கு அனுப்பப்படக் கூடாது.

9. இந்த வர்த்தமானியின் பகுதி I, பிரிவு (II அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பெற்றுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஜி. அமரசேன,
சுகாதார அமைச்சின் செயலாளருக்காக.

சுகாதார அமைச்சு,
த. பெ. இல. 500,
கொழும்பு, செப்ரெம்பர் 7, 1973.

**விண்ணப்பப் படிவம்**

சுகாதார அமைச்சு

**சுகாதார திணைக்களத்தில் சுகாதார கல்வி உத்தியோகத்தர் பதவி**

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)
(அ) குடும்பப் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. (அ) பிறந்த திகதி :————.
(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
(ஆ) 12.10.73 இல் சரியான வயது :————.
வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.

4. நாட்டினமும் அதனைப் பெற்ற விதமும் :————.

5. பிறந்த இடம் :————.

6. விண்ணப்பதாரர் மணம் முடித்தவரா, தனி ஆளா அல்லது தாரம் இழந்தவரா ? :————.

7. பின்வரும் தேவைகளுக்காக நீர் பயின்ற பாடசாலைகளும் கல்லூரிகளும் :————.
(சேர்ந்த வெளியேறிய திகதிகளுடன்)
(அ) பொதுக் கல்வி :————.
(ஆ) உயர்தொழிற் கல்வி :————.

8. கல்வித் தகைமைகள் :————.
(அதி உயர்ந்த கல்வித் தகைமையின் சான்றிதழ் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

9. உயர்தொழிற் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் பெற்றிருப்பின் அவையும், அவற்றைப் பெற்ற திகதிகளும் :————.

10. பாடசாலையை விட்டு விலகிய பின்னர் பார்த்த வேலை : ————.

11. ஏதாவது விசேட உரிமைக் கோரிக்கைகள், தகைமைகள் அல்லது அனுபவம் ஆதியன பற்றிய விபரங்கள் : ————.

12. சிங்களத்தில் தேர்ச்சி :————.

13. விதப்புரை தரக்கூடிய மூவரின் பெயர்களும், முகவரிகளும், பதவிப் பெயர்களும் :————.
1. ————.
2. ————.
3. ————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

9-512—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78.

---

**சுகாதார திணைக்களம்**

உதவிச் சுகாதார கல்வி உத்தியோகத்தர் பதவி

சுகாதார திணைக்களத்தில் உதவிச் சுகாதார கல்வி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பப்பட்டு, ஒக்ரோபர் 12, 1973 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்கக் கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

2. சம்பள விகிதம்.—இப்பதவிக்கான சம்பள விகிதம் ரூபா 6,600—240 × 5—360 × 4—ரூபா 9,240. ரூபா 8,220 க்கு முன்னர் திறமைகாண் தடை இருக்கும்.

3. நியமன நியதிகள்.—பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் அற்றதுமாகும். அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவுதொகைகள் செலுத்தப்படும். ஓய்வூதிய உரிமையுடைய ஓர் அரசாங்க உத்தியோகத்தர் தேர்வு செய்யப்பட்டால், 24.12.71 இன் 42 ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிருபத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாயிருக்கும்.

4. வேண்டப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குச் சான்று காட்டுதல் வேண்டும்.

(i) 12.10.73 இல் 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல். இவ்வயதெல்லை ஏற்கனவே அரசசேவையில் உள்ளவர்க்கு ஏற்புடையதன்று.

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருத்தல் ;

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானங்களிலே சிறப்புப் பட்டம் பெற்ற ஒரு பட்டதாரியாக அல்லது

(ஆ) சுகாதார திணைக்களத்தில் ஆண்டொன்றுக்கு 5,736 ரூபாவுக்குக் குறையாத சம்பளம் பெறும் ஓர் உத்தியோகத்தராகவும், ரோயல் சுகாதார சங்கத்தின் (இங்கிலாந்து) சான்றிதழ் ஒன்றைப் பெற்றவராகவும் பட்டத்துக்குப் பின்னைய படிப்பாகக் குறைந்தது ஒரு வருட சுகாதார கல்விச் சிறப்புப் பயிற்சியைப் பல்கலைக் கழகத்தில் திருப்திகரமாகப் பூர்த்திசெய்தவராகவும் இருத்தல்.

5. ஏலவே அரச சேவையில் உள்ள வேட்பாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் இந்த அலுவலகத்திற்கு வந்துசேரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

6. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதியல்ல) இணைத்தனுப்புதல் வேண்டும்.

(அ) அதியுயர்ந்த கல்வி, உயர்தொழிற் தகைமைகளது சான்றிதழ்.

(ஆ) இப்பதவிக்கு விண்ணப்பதாரரின் குணமும் தகுதியும் பொருத்தமானவை என்பதற்கான அண்மைக்கால மூன்று நற்சான்றிதழ்கள். (ஏற்கனவே அரச சேவையில் உள்ள வேட்பாளர்கள் இந்த உப பிரிவின்படி நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

(இ) பிறப்புச் சான்றிதழ்ப் பிரதி.

7. விண்ணப்பங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமே தவிர தனிப்பட்ட முறையில் எனக்கு அனுப்பப்படக்கூடாது.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I, பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பெற்றுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஜி. அமரசேன,
சுகாதார சேவைகள் பணிப்பாளருக்காக.

சுகாதார திணைக்களம்,
த. பெ. 500,
கொழும்பு, செப்ரெம்பர் 6, 1973.

### விண்ணப்பப் படிவம்

சுகாதார திணைக்களம்

**உதவிச் சுகாதார கல்வி உத்தியோகத்தர் பதவி**

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)
(அ) குடும்பப் பெயர் :————.
(ஆ) பிறபெயர்கள் முழுவதும் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. (அ) பிறந்த திகதி :————.
(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
(ஆ) 12.10.73 இல் சரியான வயது :—
வருடங்கள்———— மாதங்கள்———— நாட்கள்————

4. நாட்டினமும் அதனைப்பெற்ற விதமும் :————.

5. விண்ணப்பதாரர் மணம் முடித்தவரா, தனி ஆளா அல்லது தாரம் இழந்தவரா ? :————.

6. பின்வரும் தேவைகளுக்காக நீர் பயின்ற பாடசாலைகளும் கல்லூரிகளும் :————.
(சேர்ந்த, வெளியேறிய திகதிகளுடன்)
(அ) பொதுக் கல்வி :————.
(ஆ) உயர்தொழிற் கல்வி :————.

7. கல்வித் தகைமைகள் :————.
(அதி உயர்ந்த கல்வித் தகைமையின் சான்றிதழ்ப் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

8 உயர்தொழிற் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும், அவற்றைப் பெற்ற திகதிகளும் :————.
(அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள், உயர்தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்புரிமை, மற்றும் தகைமைகளும் குறிப்பிடப்படலாம்).

9 (1) பாடசாலை அல்லது கல்லூரியை விட்டு விலகிய பின்னர் பார்த்த வேலை (சேர்ந்த, வெளியேறிய திகதிகளுடன்) : ————.

(2) சுகாதார திணைக்களத்தின் உறுப்பினர் ஒருவர் எனின், வகித்த பதவி, தரம் (ஏதும் இருப்பின்), ஆண்டொன்றுக்குப் பெற்ற சம்பளம் ஆகியனவும், ரோயல் சுகாதார சங்கத்தின் சான்றிதழ் பெற்றுள்ளாரா என்பதும் :————

10. ஏதாவது விசேட உரிமைக்கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி, அல்லது அனுபவம் ஆகியன பற்றிய விபரங்கள் :————.

11. சிங்களத்தில் தேர்ச்சி :————.
(ஏற்கனவே அரசசேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

12. விதப்புரை தரக்கூடிய மூவரின் பெயர்களும், முகவரிகளும், பதவிப்பெயர்களும் :————.
1.————
2.————
3.————

13. நற்குணச் சான்றிதழ்கள் வழங்கிய மூன்று பிரபலஸ்தர்களது பெயர்களும் முகவரிகளும் :—
1.————
2.————
3.————

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

9-533—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### சௌக்கிய அமைச்சு

சௌக்கிய சேவைகள் திணைக்களத்தின் பிரதி நிருவாகத் தர மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு சௌக்கியத் திணைக்கள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சௌக்கிய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டிய இந்த விண்ணப்பங்கள் முடிவுத் திகதி 1973 ஒக்ரோபர் மாதம் 5 ந் திகதியாகும்.

மேலதிக விபரங்களுக்கு இதன்கீழ் ஒப்பமிட்டிருப்பவருடன் தொடர்பு கொள்ளவும். கடிதத் தொடர்புகள் இந்த உத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்கு விலாசமிடப்பட்டிருத்தல் கூடாது.

ஜி. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
செயலாளருக்காக,
சௌக்கிய அமைச்சு.

சௌக்கிய அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
த. பெ. இலக்கம் 500,
கொழும்பு 1,
1973 செப். 3 ந் திகதி.

9-535—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### கல்வி அமைச்சு

உற்பத்தி முகாமையாளர் பதவி

கல்வி அமைச்சின் கீழ் பத்தலகெதரவிலுள்ள விஞ்ஞான உபகரண உற்பத்திக் கூற்றுமுகாமையாளர் பதவிக்கு இலங்கையிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் கீழே கொடுபட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உற்பத்தி முகாமையாளர் பதவி" எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் — **22.10.1973**

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் — **05.11.1973**

**குறிப்புகள் :** (i) விதிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பம் ஒன்றேனும் அத்தகைய விண்ணப்பம் பற்றிய கடிதமேனும் அஞ்சலில் காணாமற்போனது அல்லது தவறிவிட்டது என்னும் குற்றச்சாட்டு எதுவும் சிர்தூக்கப்படமாட்டாது. கடைசி நாள்வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் அபேட்சகர்கள் தாமாகவே தமக்கு இடைஞ்சலைத் தேடுபவராவர்.

(iii) கடல் கடந்த நாடுகளிலிருந்து விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள், விரும்பினால் தமது விண்ணப்பங்களை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு தாம் வதியும் நாட்டின் அல்லது அண்மையிலுள்ள நாட்டின் இலங்கைக் குடியரசுப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு, விதிக்கப்பட்ட திகதிக்குள் அனுப்பி வைக்கலாம்.

(iv) **மருத்துவ சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசு அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்படும் இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாய் இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறாகும் :—
ரூ. 8,160—8/360—2/480—ரூ. 12,000. ரூ. 11,040 ஆகிய சம்பளம் பெறுமுன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

**குறிப்பு.**— 1.10.69 க்கு முன்னரான சம்பள அளவுத்திட்டம் ரூ. 5,520—8/360–2/480—ரூ. 9,360 ஆகும்.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவியை ஏற்கனவே வகிக்காவிடின் அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனத் திகதியின் போது அரச சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பவராயின் அவர் தொடர்ந்து உபகாரச் சம்பள உரித்தந்தஸ்தை அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரச சேவையில் ஏற்கனவே இல்லாவிடின், முதற்கண் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவர். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரச சேவையில் வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

(ii) நியமதாரியைத் தொடர்ந்து சேவையில் வைத்திருத்தற்கு அவர் தகுதியற்றவரெனத் தகுதிகாண் காலத்தில் காணப்படுமிடத்து அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை அவர் வகித்திருப்பின், அவர் அவருடை நிலையான பதவிக்கு தகுதிகாண் காலத்தில் எந்நேரத்திலேனும் அக்கால முடிவிலேனும் திருப்பி அனுப்பப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அவர் வகித்திராவிடின் அவருடைய சேவை நிறுத்தப்படும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ளவையும் இனிமேல் ஆக்கப்படக்கூடியவையுமான விதிகளுக்கு அமைய வேண்டும்.

4. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வபராகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும்.

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) **கல்வித் தகைமைகளும் உயர்தொழில் தகைமைகளும்**—(1) கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் ஓர் எந்திரவியல் பட்டமேனும் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் அல்லது அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தால் வழங்கப்படும் எந்திரவியல் தகுதித் தேர்வுச் சான்றிதழேனும் சமமான எந்திரவியல் பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும். இதனுடன் பின்வரும் விசேட தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும்.

(2) **விசேட தகைமைகள்.**—(அ) கற்பித்தல் உபகரணங்கள் அத்தியாவசியமான பாடங்களைக் கற்பித்தல் 5 வருடத்துக்குக் குறையாத அனுபவமும் இப்பாடங்களை மேற்பார்வை செய்பவராக 5 வருடத்துக்குக் குறையாத அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

**இதனுடன்**

(ஆ) கற்பித்தல் உபகரணங்கள் அத்தியாவசியமான பாடங்களிலான பாடவிதான அபிவிருத்தி வேலையில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(3) **மேலதிக தகைமைகள்.**—விதிக்கப்பட்ட தகைமைகளுடன் பின்வரும் மேலதிக தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு முதனுரிமை வழங்கப்படும்.

(அ) கற்பித்தலுக்கு அத்தியாவசியமான உபகரணங்கள் பற்றியும் அவற்றை உற்பத்தி செய்தலும் சீர்த்திருத்தஞ் செய்தலும் பற்றியும் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

(ஆ) கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு நிலையத்தில் வேலைக்களப் பயிற்சியில் குறைந்தபட்சம் 3 மாத பயிற்சி.

5. அரச சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். 1 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும், விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அவை விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால்பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறும் அவர் சிபார்சு செய்யுமிடத்து அவை ஏற்றுக் கொள்ளப்படும். எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மு. கு.**— சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள் (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை.)

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் நிரந்தரச் செயலாளரின் உத்தியோக விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரச சேவையிலுள்ள பதவிகளுக்காக நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடரெண் : பொ. நி./22/236,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 4 ந் உ.

விண்ணப்ப மாதிரிப் படிவம்

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட்ட வேண்டியது)

**கல்வி அமைச்சின் கீழ் பத்தலகெதரவிலுள்ள விஞ்ஞான உபகரண உற்பத்திக் கூற்று முகாமையாளர் பதவி**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு./திருமதி/செல்வி.————.
2. முழுப்பெயர் :————.
3. உத்தியோக முகவரி :————.
4. சொந்த முகவரி :————.
5. (அ) இலங்கையரா :————.
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா :————.
6. பிறந்த திகதி : வரு :————. மா.————. நாள்.————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது : வரு.————. மா.————. நாள் : ————
8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள் :—
   (அ) பதவி :————.
   (ஆ) நிரந்தரமா? தற்காலிகமா? :————.
   (இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? :————.
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? :————.
   (உ) திணைக்களம் :————.
   (ஊ) நிலையம்/வேலை இடம் :————.
   (எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :————.
   (ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதய படி :————.
9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| | பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| | தராதரப் பத்திரம் | வழங்கிய நிலையம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :

| | நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |

12. தொழில்நுட்ப/உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| | நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாக் கொடுபடவேண்டியது) :—

| | திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |
| 6. | | | | | | |

14. மேலதிக தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| வேலைக்கமர்த்தப்பட்டுள்ள/ பயிற்சிபெற்ற நிலையம் | வேலையின்/பயிற்சியின் தன்மை | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| | | | |

15. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவற்றுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? ————————.
(அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? :————————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

17. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு :——————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிய ளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————————.

9–532—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

**கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் போதனாசிரியர் பதவிகளுக்குப் பயில் போதனாசிரியர்களைச் சேர்த்தல்**

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் நிலவும் போதனாசிரியர் பதவிகளுக்குப் பயில் போதனாசிரியர்களைச் சேர்க்கும் பொருட்டு கீழ்க் காணும் தகைமைகள் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள், "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

2. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு, கீழ்க்காணும் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் ஒன்றில் அல்லது பலவற்றில் கட்டுபெத்த தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் ஒருவருட பயிற்சி அளிக்கப்படும்.

3 தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களிலான இப்பதவிகள் நிரந்தரமானவை ; ஆனால் உபகாரச் சம்பள உரித்தற்றவை. இப் பதவிக்குரிய திரட்டிய வருடாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 6,024—4/144—8/180—ரூ.8,040—ஆகும். (1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 4,800—3/180—6/240—ரூ. 6,780 ஆகும்.)

குறிப்பு.—பயில்போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் சிங்கள/தமிழ் மொழிமூலம் மின்சாரத் தொழில்களில் மாத்திரமே உண்டு.

ஏனைய சகல துறைகளிலுமான வெற்றிடங்கள் சிங்கள மொழி மூலம் மாத்திரமே உண்டு.

4. பயிற்சி பெறும் பொருட்டுச் சேர்க்கப்படுவோர் பின்வரும் கல்வி, தொழில், பிற தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(1) 13.10.73 அன்று 19 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மிகைப்படாமலுமிருத்தல் வேண்டும்.

(2) நற்குணமும், உடநலமும் உடையவராயிருத்தல்.

(3) பின்வருவன சித்தியெய்தியிருத்தல் :—

(அ) சிரேட்ட பாடசாலைத் தகுதிப் பத்திரம், அல்லது

(ஆ) சிங்கள மொழி/தமிழ் மொழி உடன் எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேல் தோற்றாது சித்தியெய்திய கல்விப் பொது (சாதாரணதர) தகுதிப் பத்திரம், அல்லது

(இ) ஒரு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை, இவைகளுடன்

(4) (அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழில்நுட்ப அலுவலர் தராதரப் பத்திரம் (மின்முறை பொறிமுறை), அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் மூன்றாண்டு பொறிமுறை எந்திரவியல் தகுதிப் பத்திரம், அல்லது

(இ) காடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறிமுறை எந்திரவியல் டிப்புளோமா, அல்லது

(ஈ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) தகுதிப் பத்திரம், அல்லது

(உ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மாலை அல்லது பகுதி நேரக் கட்டிட அமைப்புத் தகுதிப் பத்திரம், அல்லது

(ஊ) காடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் குடிசார் எந்திரவியல் டிப்புளோமா, அல்லது

(எ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மூன்றாண்டு மாலை, மின் எந்திரவியல் தகுதிப் பத்திரம், அல்லது

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட உண்ணாட்டு அல்லது வெளிநாட்டுத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திலிருந்து பெறப்பட்டதும், உபபந்தி (அ) தொடக்கம் (எ) வரை குறிப்பிடப்பட்டவற்றிற்குச் சமனானது அல்லது அவற்றிலும் உயர்ந்தது எனக் கருதக்கூடியதும், கீழே தரப்பட்ட "5" ஆம் பந்தியிலுள்ள பயிற்சியொன்றைப் பெற ஏற்றதுமான வேறு தொழில்நுட்பத் தகைமைகள்.

(5) மேலே விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகள், உயர் தொழில் தகைமைகள் ஆகியவற்றுடன் கணிசமான அளவு அனுபவம் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு.—அனுபவம் யாதேனும் பெற்றிராத விண்ணப்பதாரிகள் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

**5. பயிற்சிக் காலப் படிகள் :—**

ரூபா 400 க்கு மேற்படாத நிலையான மாதப்படி வழங்கப்படும். (அரச சேவையிலுள்ள அலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்டால் இவ்விடயம் தாபனப் பணிப்பாளருடன் ஆலோசிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்).

தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப கீழே தரப்பட்ட பயிற்சிகளில் ஒன்றிற்கு அல்லது பலவற்றிற்கு விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவர் :—

(1) தச்சு வேலையும் இணைப்பு வேலையும், பெட்டக உருவாக்கம் முதலியனவற்றைச் சிறப்பாகக் கொண்ட மரவேலை.

(2) பொருத்தல், பொறியீடு, மாற்சாலை வேலை, தகட்டு உலோக வேலை முதலியனவற்றைச் சிறப்பாகக் கொண்ட உலோக வேலை.

(3) வீட்டு மின் கம்பியிணைப்பும் மின் நிறுவனங்களும், ஒளியிடுக் தொகுதி, குளிரேற்றல், காற்றுக் கட்டுப்படுத்தல், இ–

டியோ பழுதுபார்த்தல் முதலியனவற்றை அடக்கிய மின் தொழில்.

(4) தானியங்கிப் பொறியியல், இருபொறியின் பொறியியல் முதலியன.

(5) மேசன் வேலை, செங்கற் பதித்தல் இவைகளில் விசேடத்துவம் பெறும் கட்டடத் தொழில்,

(6) தொழில்நுட்ப வரைதல்.

6. பயிற்சியின் பொருட்டு பயில் போதனாசிரியர்களாகத் திரட்டப்படுவோருக்கு அமையும் நிபந்தனைகள் :—

(அ) பயிற்சியின் பொருட்டுத் திரட்டப்பட்டவர், அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்து, அப்பயிற்சி முடிவுறும்போது குறிப்பிடப்படும் தேர்ச்சியை எய்துதல் வேண்டும்.

(ஆ) (1) குறிப்பிடப்படும் பயிற்சியைப் பயிற்சிக் காலத்தில் திருப்திகரமாக முடிப்பார் எனவும் அதன் பின் அரசாங்கத்தால் வரையறுத்தப்படும் கால வரையில் கல்வித் திணைக்களத்தில் கடமை ஆற்றுவார் எனவும் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

(2) பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறுமிடத்து, தம் பயிற்சிச் செலவு முழுவதையும் மீள அளிப்பதாக, இரு பிணையாளிகளுடன் உயர் நீதிமன்ற வழக்கறிஞரின் முன்னிலையில் ஓர் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(இ) (1) பயிற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றி, குறிப்பிடப்பட்ட தரத்தில் தேர்ச்சியடைந்து, நிரந்தர போதனாசிரியர் பதவியில் அமர்த்த ஏற்றவரெனப் பொருத்தமான அதிகாரிகளால் தகுதிப் பத்திரம் அளிக்கப்படும் அடிப்படையில், வெற்றிடங்கள் ஏற்படும்போது அப்பயிலுனர்கள் பதவியில் அமர்த்தப்படுவார்கள்.

(2) நிரந்தர போதனாசிரியர் பதவிக்குப் பயிற்சி பெற்ற போதனாசிரியர்கள் அமர்த்தப்படுமிடத்து, நிரந்தர போதனாசிரியர் பதவிக்கு விதிக்கப்படும் சாதனை அனுபவமும் கற்பிக்கும் அனுபவமும் அல்லது சாதனை/கற்பிக்கும் அனுபவம் ஐந்து வருட காலத்திலிருந்து குறைக்கப்பட்டு ஐந்து வருட கால அனுபவம் பெறும் வரையுள்ள மீதிக் காலத்திற்கும் இப்பதவிக்கான தொடக்கச் சம்பளத்தில் அமர்த்தப்படுவார்.

குறிப்பு.—(1) நிரந்தர போதனாசிரியர் பதவிக்கு நியமனஞ் செய்யும்போது, பயிற்சி பெற புகுமுன்பு பெற்ற அனுபவமும் கணக்கிடப்படும்.

(2) நிரந்தர போதனாசிரியர் பதவிக்குப் பயிற்சி பெற்ற போதனாசிரியர்கள் நியமனஞ் செய்யப்படும்போது, அவர்கள் ஒவ்வொரு போதனாசிரியர் பதவிக்கும் ஆள்திரட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பொருத்தமான தகைமைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

7. அரச சேவையிலுள்ள தகுதியான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், தொடர்பான திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும். குறிக்கப்பட்ட திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்களைப் பற்றியவிடத்து அவை குறிக்கப்பட்ட திகதியின் முன் திணைக்களத் தலைவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு, தாமதத்திற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தைத் திணைக்களத் தலைவர்கள் கொடுத்து ஏற்றுக்கொள்ளும்படி சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

8. விண்ணப்பதாரிகள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) உயர் கல்வித் தகைமைச் சான்றிதழும் தொழிற்றகைமைச் சான்றிதழும்.

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், குணம், நியமனத் தகுதி குறித்து அண்மையில் வழங்கப்பட்ட மூன்று குணச்சான்றிதழ்கள்.

குறிப்பு.—அரச சேவையில் ஏலவே நிரந்தர பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் மேற் குறிப்பிடப்பட்ட உப பிரிவு (இ) இன் பிரகாரம் சான்றிதழ்களை இணைக்க வேண்டியதில்லை.

9. அரச சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இவ் அரசிதழின் I ஆம் பாகம், (II அ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்க.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இல. பொ. நி. 3/440
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973.9.10.

எண் : பொ. நி/3/440.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கல்வி அமைச்சு**

(8½" × 13½" அளவு அரைத்தாளில் தயாரிக்க வேண்டும்)

**தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் போதனாசிரியர் பதவிகளுக்கான பயில் போதனாசிரியர்களைச் சேர்த்தல்**

1. முழுப் பெயர் (தெளிவாக) : திரு./திருமதி/செல்வி :————.

2. தபால் விலாசம் :————.

(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாதியம் :————.

(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது :—
வருடம்————, மாதம்————, நாள்————.

(ஆ) பிறந்த திகதி :— வருடம்————, மாதம்————, நாள்————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

5. பின்வருவோர் பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் :————.

6. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள் :—

பொதுக் கல்வி

| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை |
|---|---|---|
| | | |

உயர்தொழில்/தொழில்நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்)

| நிலையம் | தொடக்கம் | வரை |
|---|---|---|
| | | |

(ஆ) கடைசியாகப் படித்த பாடசாலையிலிருந்து விலகிய திகதி :————.

7. (அ) விவாகம் செய்தவரா ? செய்யாதவரா ? தாரமிழந்தவரா ? :————.

(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க :—

(i) விவாகத் திகதி :————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை :————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :—

(அ) சிங்களத்தில் :————.
(ஆ) தமிழில் :————.
(இ) ஆங்கிலத்தில் :————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழிநுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும் (யாதேனும் பெற்றிருப்பின்) :————.

(அ) அவைகள் பெற்ற திகதிகளும் (ஆ) படித்த நிலையங்களும் :————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி :—

(அ) சிங்களம் :———. தமிழ் :———. ஆங்கிலம் :———

11. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக்கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக :—

12. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? அங்ஙனமாயின்—

(அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி :————.

(ஆ) வழக்கு என் :————.

(இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

13. நீர் பணமுட்டு அற்றவரா, பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு? :————.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) :————.

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—(மூலப் படிகள் அல்ல—இணைத்தனுப்பப்படவேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர் இவ் விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை) :————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்—

(அ) படைக்கூற்றின் பெயர் :————.

(ஆ) வகித்த பதவி :————.

(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

17. (அ) பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் :—

(i) நிலையங்களின் பெயர்கள் :————.

(ii) வகித்த பதவிகள் :————.

(iii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.

(iv) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும், (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள்—

(i) நிலையத்தின் பெயர் :————.

(ii) பதவியும் பதவியின் தரமும் :————.

(iii) உபகாரச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா அல்லது சமயோசிதமானதா? :————.

(iv) சகாயப்படிகள் நீங்கலாக தற்போதைய வருடாந்தச் சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் :————.
(திரட்டிய சம்பளம் பெறுபவராயின் திரட்டிய வருடாந்தச் சம்பளத்தையும் சம்பள அளவுதிட்டத்தையும் குறிப்பிடுக)

(v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

(vi) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா? அங்ஙனமாயின் உறுதிப்படுத்தற் கடிதத்தின் பிரதியை இணைக்கவும் :————.

இவ் இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

இடம் :————.

திகதி :————.

9-541—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

இல. வெ. மு/2/237/(1)

கல்வி அமைச்சு

எகிப்தின் அறபுக் குடியரசினால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்—1973/74

எகிப்தின் அறபுக் குடியரசினால் பின்வரும் துறைகளில் வழங்கப்படும் பட்டதாரி மாணவருக்கான புலமைப் பரிசில் ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) அறபு மொழியும் இலக்கியமும் (3-4 வருட காலம்)

(2) மருத்துவம் (7-8 வருட காலம்)

(3) பழச்செய்கை, பழங்களைத் தகரத்தடைத்தல், பழங்களைப் பேணுதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவத்துடன் விவசாயம் (4-4 வருட காலம்)

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி நெறி திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுக்கப்பட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.— புலமைப் பரிசில்களின் கால எல்லை 1 ஆம் பந்தியில் காட்டியுள்ளவாறு ஆகும். (கால அளவு நீடிக்கப்படக்கூடும்.)

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு எகிப்து அறபுக் குடியரசு அதிகாரிகளின் தற்துணிபுக்கமைய புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) ஸ்ரீ லங்கா பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1972.12.31 அன்று 25 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) அறபு மொழியில் சிறந்த அறிவு பெற்றவராயிருக்க வேண்டும்.

(iv) ஆங்கிலத்தில் உயர்தர தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(v) ஒரே அமர்வில் குறைந்தபட்சம் 3 பாடங்களில், விரும்பும் கற்கை நெறிக்கு உகந்த முறையில் க. பொ. த. ப. உயர் தர) பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

குறிப்பு 1. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்

பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 31.12.72 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.** தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க் காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) எகிப்தின் அறபுக் குடியரசுக்குப் போய், வருவதற்கான உல்லாசப் பிரயாண வகுப்பு விமானச் சேவை.

(ஆ) ஒரு மாதாந்த படி.

(இ) இலவச தங்குமிட வசதி.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவுசெய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேசகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சைக்குச் தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், எகிப்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக ஸ்ரீ லங்கா குடியரசுக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) ஸ்ரீ லங்கா குடியரசுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் எகிப்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினுல் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.10.5 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
1973.9.10.

9-538—21.09.73 ந. திகதிய வர்த்தமானி இல. 78

---

எண் : பொ.நி/3/441

**கல்வி அமைச்சு**

வாணிகவியல் போதனுசிரியர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் வாணிகவியல் போதனுசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப்படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர் (பொது நிருவாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வாணிகவியல் போதனுசிரியர் பதவி" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. நியமனங்கள் சேமலாப நிதி அடிப்படையில் அமையும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தனது சம்பளத்தில் 6% த்தை அரசாங்க சேவை சகாயநிதிக்குச் செலுத்தவேண்டும். இதற்கான அரசாங்கத்தின் உதவு தொகை 9% ஆகும். நியமனங்கள் சாதாரணமாக 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். எனினும், நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவியை ஏற்கனவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவருடைய உபகாரச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

3. **தகவுத் திறன்.**—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(iii) பின்வரும் கல்வித் தகைமைகளுள் யாதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) சி. பா. த. பத்திரம் : அல்லது

(ஆ) க.பொ.த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி ; அல்லது

(இ) சமனான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி.

(iv) பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் குறைந்தபட்சம் யாதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் வாணிகவியல் அல்லது பொருளியல் பட்டம் ;

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் வாணிகவியல் அல்லது கணிதவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் ;

(இ) பிரித்தானிய வாணிகவியல் ஆசிரியர் தராதரப் பத்திரம் அல்லது சமமான தகைமை, இதனுடன் 15 வருட செய்முறை/கற்பித்தல் அனுபவம்.

(ஈ) சமமான தகைமை.

**குறிப்பு.**—கற்பித்தல்செயல்முறை அனுபவம் அல்லது இவ்விருவகை அனுபவம் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(v) சிங்களத்தில் கற்பிக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்திற்குள் சிங்களத்தில் கற்பித்தற்கான தேர்ச்சி பெற வேண்டும்.

4. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 6,024—4 × 144—8 × 180—ரூபா 8,040 ஆகும். நியமதாரிகள் திரட்டிய சம்பள அளவுத் திட்டத்திலான ரூபா 6,780, ரூபா 7,500 ஆகிய சம்பளப் படிகளைத் தாண்டிச் செல்லுமுன் வினைத்திறமை காண் பரீட்சைகளில் தேறவேண்டும். (1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு : ரூபா 3,420—4 × 120—8 × 180—ரூபா 5,340)

5. அரச சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ் வமைச்சுக்கு நேரே அனுப்பவேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டது) ;

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள் ;

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள் ;

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள். (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை).

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்கவேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2.
1973 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 10 ந உ.

**விண்ணப்ப மாதிரிப் படிவம்**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

**கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் வாணிகவியல் போதனாசிரியர் பதவி**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்)—திரு./திருமதி/செல்வி :————.

2. முழுப்பெயர் :————.

3. உத்தியோக முகவரி :————.

4. சொந்த முகவரி :————.

5. (அ) இலங்கையரா? :————.

(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா? :————.

6. பிறந்த திகதி : வருடம் :————. மாதம் :————. நாள் :————.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது : வருடம் :————. மாதம் :————. நாள் :————

8. தற்போதைய பதவிபற்றிய விபரங்கள்—

(அ) பதவி :————.

(ஆ) நிரந்தரமா தற்காலிகமா? :————.

(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா :————.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா? :————.

(உ) திணைக்களம் :————.

(ஊ) நிலையம்/வேலை இடம் :————.

(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :————.

(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி :————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. தொழில்நுட்ப/உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா? (அங்ஙனமாயின், விபரங்களைக் கொடுக்கவும்) :————.

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா? (அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்) :————.

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,

திகதி :————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

9-552—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

### அநுராதபுர மாவட்டத்தில் சிருவஸ்திபுர பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் நுவரகம் பளாத்தை பிரிவிற்கு (பொது, கண்டியர்) விவாகப் பதிவாளர் பதவி

சிருவஸ்திபுர பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிலையாகக் குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலமாக வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் விரும்பத்தக்கவர்களுமான ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்ப முடிவுத் திகதியன்று இருபத்தொரு வயதுக்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். நிரந்தர அரசாங்க சேவையில் உள்ளவர்களாயின் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும் இப்பிரிவின் காரியாதிகாரியின் அலுவலகத்திலும் கிராம சேவையாளரின் அலுவலகங்களிலும் உள்நாட்டு மன்ற அலுவலகத்திலும், கிராம நீதி மன்றத்திலும் தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் நிலையத்திலும், சனசமூக நிலையங்களிலும், பொதுச் சந்தை நிலையத்திலும், கூட்டுறவுச் சங்க அலுவலகங்களிலும், மற்றும் இப்பிரிவின் பிரசித்தமான இடங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் நிரப்பப்பட்ட சகல விண்ணப்பங்களும் 1973 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

எல். பி. டி. ஜயசேன,
மேலதிக மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
அனுராதபுரம்,
1973 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5 ம் திகதி.

9–536—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### கண்டி பெரும் பகுதியில் ஹாரிஸ்பத்துப் பிரிவில் நீரெல்லப் பகுதியில் முஸ்லீம் விவாகப் பதிவுகாரர் பதவி

ஹாரிஸ்பத்துப் பிரிவில் நீரெல்லப் பகுதிக்குள் நிரந்தரமாகக் குடியிருக்கும் விவாகமான ஆண் முஸ்லீம்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும் பொலிஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும் கூட்டுறவுத் தாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சி. சி. டி. பொன்சேகா,
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
மாவட்டப் பதிவாளருக்காக.

கண்டி,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1973 ம் ஆண்டு செப்டம்பர் 5 ம் திகதி.

6–463—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### கல்வி அமைச்சு

அரசினர் மகா வித்தியாலயங்களிலுள்ள II ஆந் தர விசேட பதவிகள்

பின்வரும் மாவட்டங்களிலுள்ள வெற்றிடங்களைக் கொண்டுள்ளவான அரசினர் சிங்கள/தமிழ், முஸ்லீம் மகா வித்தியாலயங்களில் II ஆந் தர விசேட பதவிகளுக்கு ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு இயைந்தனவாகவே தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் உரிய பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு அல்லது உரிய மாவட்டத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதம கல்வி உத்தியோகத்தருக்குக் கீழ்க்காணும் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியனவாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " II ஆந் தர விசேட பதவி—சிங்கள/தமிழ் மொழிமூலம் " எனத் தெளிவாக அடையாளமிடப்படவேண்டும் (பொருத்தமற்றதைக் கீறிவிடுக).

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்—13.10.1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—20.10.1973.

**குறிப்பு.**—20.11.70 ஆந் திகதிய 14,933 ஆம் இலக்க, 26.2.71 ஆந் திகதிய 14,947 ஆம் இலக்க, 7.5.71 ஆந் திகதிய 14,957 ஆம் இலக்க வர்த்தமானிகளில் வெளியான அறிவித்தல்களுக்கிணங்க இப்பதவிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள், இப்பதவிகளுக்கு சிர்துக்கப்பட விரும்பினால் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.

வெற்றிடங்களைக் கொண்டுள்ள கல்வி மாவட்டங்களுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதேசக் கல்விப் பணிப்பாளரின்/பிரதம கல்வி உத்தியோகத்தரின் முகவரிகள் கீழே கொடுபட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மாவட்டங்களின் பெயர்களுக்கு எதிரே கொடுபட்டுள்ளது. வெற்றிடங்கள் எதனையேனும் எல்லாவற்றையேனும் நிரப்பாதுவிடுதற்குக் கல்வி அமைச்சுக்கு உரித்துண்டு.

| கல்வி மாவட்டம் | கல்வி மாவட்டத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதேசக் கல்விப் பணிப்பாளரின்/பிரதம கல்வி உத்தியோகத்தரின் முகவரி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாத்தறை | பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், மாத்தறை | 12 |
| தங்காலை | பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், தங்காலை | 12 |
| இரத்தினபுரி | பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், இரத்தினபுரி | 20 |
| கேகாலை | பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், கேகாலை | 18 |
| மாத்தளை | பிரதம கல்வி உத்தியோகத்தர், கல்வி அலுவலகம், மாத்தளை | 11 |
| நுவரேலியா | பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், நுவரேலியா | 23 |
| பண்டாரவளை | பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், பண்டாரவளை | 16 |
| மொனராகலை | பிரதம கல்வி உத்தியோகத்தர், கல்வி அலுவலகம், மொனராகலை | 6 |
| சிலாபம் | பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், சிலாபம் | 17 |
| அனுராதபுரம் | பிரதேச கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், அனுராதபுரம் | 23 |
| பொலனறுவை | பிரதம கல்வி உத்தியோகத்தர், கல்வி அலுவலகம், பொலனறுவை | 7 |
| வவுனியா | பிரதம கல்வி உத்தியோகத்தர், கல்வி அலுவலகம், வவுனியா | 2 |
| மன்னார் | பிரதம கல்வி உத்தியோகத்தர், கல்வி அலுவலகம், மன்னார் | 7 |
| மட்டக்களப்பு | பிரதேச கல்விப் பளப்பாணர், கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு | 4 |
| அம்பாறை | பிரதம கல்வி உத்தியோகத்தர் கல்வி அலுவலகம், அம்பாறை | 5 |
| திருகோணமலை | பிரதம கல்வி உத்தியோகத்தர் கல்வி அலுவலகம், திருகோணமலை | 12 |

**குறிப்புகள்.**—(1) விண்ணப்பதாரி ஒருவர் ஒரு விண்ணப்படமே அனுப்பலாம். பிரதேச கல்விப் பணிப்பாளர்/பிரதம கல்வி உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பும் ஒரு விண்ணப்பதாரி இன்னொரு விண்ணப்பத்தை இன்னொரு பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு/பிரதம கல்வி உத்தியோகத்தருக்கு அனுப்புவராயின் அவர் தன்னைத்தானே தகுதியற்றவராக்கிக் கொள்வார்.

(ii) வெளிநாடுகளிலுள்ள அபேட்சகர்கள், விரும்பினால் உரிய பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு/பிரதம கல்வி உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு தமது விண்ணப்பங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், தாம் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைக் குடியரசுப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு அனுப்பலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் பயனச் செலவும்.**—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்படும் இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்கு தகுதியான உடல்நலம் உடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகள்.**—(அ) இப்பதவி நிரந்தரமானது. ஆனால் உபகாரச் சம்பளமற்றது. நியமனங்கள் சேமலாப அடிப்படையில் அமையும். எனினும், அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை 31.12.71 அன்று வகித்தும் தற்போது அத்தகைய நிரந்தர பதவிகளில் இருந்தும் வருபவர்கள் உபகாரச் சம்பள உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள்.

(ஆ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின், முதற்கண், மூன்று வருட காலத்துக்குத் தகுதி காண், முறையில் நியமிக்கப்படுவார்கள். நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் ஒரு வருட காலத்துக்குப் பதிற்கடமைபுரியும்வகையில் நியமிக்கப்படுவார்.

பதவியில் உறுதிப்படுத்தப்பட்டதும், பொருத்தமான சம்பள அளவுத்திட்டத்தில் அத்தரத்துக்குப் பதவி உயர்ச்சி பெற்ற திகதியிலிருந்து தாபனச் சட்டக்கோவைப் பிரமாணங்களுக்கமைய வைக்கப்படுவார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 6,024—144 × 4—180 × 8—240 × 4—9,000.

விதிக்கப்பட்ட வீதங்களின் பிரகாரம் விவாகப்படி வழங்கப்படும்.

4. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—அபேட்சகர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தி கரமான சான்று காட்டல் வேண்டும் :—

(அ) 13.10.1973 அன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ஆ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(இ) (i) பயிற்றப்பட்ட பட்டதாரியாக 1.5.68 க்கு முன் கணிக்கப்பட்ட ஒருவராக அல்லது கல்வித் தகுதித் தேர்வுப் பரீட்சையில் சித்தி அடைந்த பட்டதாரியாக அல்லது சமமான தகைமைகள் பெற்ற ஒருவராக இருக்க வேண்டும் ; அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டதாரியாக அல்லது சமமான தகைமைகள் பெற்ற ஒருவராக இருக்க வேண்டும் ; அல்லது

(iii) பட்டம் பெற்றபின் குறைந்தபட்சம் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற பட்டதாரியாக அல்லது சமமான தகைமைகள் பெற்ற ஒருவராக இருக்கவேண்டும் ; அல்லது

(iv) பயிற்றப்பட்ட பின் குறைந்த பட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்க வேண்டும்; அல்லது

(v) ஆசிரியராகக் குறைந்தபட்சம் 12 வருட அனுபவம் பெற்ற பயிற்றப்பட்ட (சிங்கள/தமிழ்) முதலாம் வகுப்பு ஆசிரியராக இருக்க வேண்டும் ; அல்லது

(vi) III ஆந் தர அதிபராக 5 வருட அனுபவம் பெற்ற III ஆந் தர அதிபராக இருக்க வேண்டும் ; அல்லது

(vii) III ஆந் தர விசேட பதவி வகிப்பவராக இருப்பதுடன், இத்தரத்தில் 10 வருட சேவை புரிந்தவராக இருக்க வேண்டும்.

குறிப்பு I.—பயிற்றப்பட்ட பட்டதாரியாக 1.5.68 க்கு முன் கணிக்கப்பட்ட ஒருவர் என்பது—

(அ) பட்டம் பெற்றபின், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் கல்வித் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றவரென ; அல்லது

(ஆ) பயிற்சி பெற்றபின், விசேட பயிற்சி பெற்ற பாடத்துடன் பட்டம் பெற்ற உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியரெனப் பொருள்படும்.

குறிப்பு II.—பயிற்றப்பட்ட பட்டதாரியாக/பட்டதாரியாக/பயிற்றப்பட்ட ஆசிரியராகப் புரிந்த சேவையைக் கணிக்கும் விடயத்தில் படிப்பு லீவுக் காலம் அல்லது சம்பளமற்ற லீவுக்காலம் எதுவும் சேர்க்கப்படாது.

குறிப்பு III.—விண்ணப்பதாரிகள் சிங்களத்தில்/தமிழில் சிறந்த அறிவு பெற்றிருக்கவேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் ஏற்கனவே சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருந்தாலன்றி, நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலத்துக்குள், க. பொ. த. (சா. தர) பத்தி ரப் பரீட்சையில் சிங்கள தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியடைய வேண்டும். சிங்களத்தில்/தமிழில் தகைமை பெறுதற்கு மூன்று வருடங்களுக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் வேதனஏற்றம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

குறிப்பு IV.—தெரிவு செய்யப்படுபவர்கள், சாதாரணமாக மகா வித்தியாலயங்களில் பிரதி அதிபர்களாக அல்லது பிரிவுத்தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள். பிரிவுத் தலைவராக நியமிக்கப்படும் விசேட பதவி வகிப்பவர்கள் பொதுவாகப் பின்வரும் பாடத்துறைகளுக்குப் பொறுப்பாக இருப்பார்கள் :—

(i) மொழியும் சமயமும் ;
(ii) கணிதமும் விஞ்ஞானமும் ;
(iii) சமூகவியல் பாடங்கள் (வரலாறு, புவியியல், ஆட்சியியல், பொருளியல், குடியியல் முதலியன) ;
(iv) தொழில்நுட்ப, வாணிக, அழகியற் கற்கைகள்.

குறிப்பு. V.—பதவி உயர்ச்சி அளிக்கப்பட்டு, குறித்த ஒரு பாடசாலைக்குக் கொடுக்கப்படும் ஒரு நியமனத்தை ஏற்க மறுக்கும் ஒருவரின் பதவி உயர்ச்சி இக்காரணத்தால் நிராகரிக்கப்படும்.

5. அபேட்சகர்கள்; வேண்டப்படுமிடத்து, பின்வரும் சாதனங்கள் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு.க. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புப் பதிவுப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா) ;
(ஆ) பட்டப் பரீட்சைத் தராதரப் பத்திரம் அல்லது ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.
(இ) உயர் தொழில் தராதரப் பத்திரம் ;
(ஈ) சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சைப் பத்திரம் ;
(உ) விண்ணப்பதாரியின் பண்பு பற்றிய சமீபகால இரு நற்சான்றிதழ்கள். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இது அமையாது).

குறிப்பு. I.—சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(II) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. விண்ணப்பங்களும் அவை தொடர்பான யாதேனும் கடிதங்களும் சம்பந்தப்பட்ட பிரதேச கல்விப் பணியாளருக்கு/பிரதம கல்வி உத்தியோகத்தருக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இவ்வமைச்சில் அல்லது பிரதேச கல்வித் திணைக்களத்தில் அல்லது மாவட்ட கல்வி அலுவலகத்தில் உள்ள எவ்வுத்தியோகத்தரின் சொந்த விலாசத்துக்கல்ல.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது ; அவற்றைப் பார்க்க.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2, 1973 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 8 ந் உ.

பி. உடகம,
செயலாளரும் மகா வித்தியாதிபதியும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**அரசினர் சிங்கள/தமிழ்/முஸ்லிம் மகா வித்தியாலயங்களிலுள்ள II ஆந் தர விசேட பதவிகளுக்கான விண்ணப்பம்**

(பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக)

1. (அ) பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு/திருமதி/செல்வி :————.
   (ஆ) முழுப்பெயர் :————.
2. முகவரி (1) (அ) சொந்த முகவரி :————.
   (ஆ) உத்தியோக முகவரி :————.
   (2) நிரந்தர வதிவிடத்திற்கேற்ப தேர்தல் தொகுதி :————.
3. ஆசிரியராகப் பதிவிலக்கம் :————.
4. வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா இலங்கையர்? :————.
5. சமயம் :————.
6. பிறந்த திகதி :———— வருடம் :————. மாதம் :————. நாள் :————.
7. 13.10.1973 அன்றுள்ளபடி வயது :————. வருடம் :————. மாதம் :————. நாள் :————.
8. விவாகம் செய்தவரா அல்லது செய்யாதவரா? :————.
9. விவாகம் செய்தவராயின்,—
   (i) வாழ்க்கைத் துணைவர் உத்தியோகம் பார்க்கிறாரா? :————.
   (ii) அங்ஙனமாயின், அதுபற்றிய விபரங்கள் :————.
10. கல்வித் தகைமைகள்—
   (i) (அ) பட்டம் :————.
   (ஆ) பல்கலைக் கழகம் :—
   (இ) வருடம் :————.
   (ஈ) வகுப்பு அல்லது பிரிவு :————.
   (உ) பட்டப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் :————.
   (ii) பட்டப்பின் தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.
   (iii) ஆசிரியராகப் பயிற்சி பெற்ற விபரங்கள் :—.
   (அ) ஆசிரியர் கலாசாலை :————.
   (ஆ) பயிற்சிக் காலம் :————.
   (இ) தராதரப் பத்திரத்தின் இலக்கமும் அது காரியப்படும் திகதியும் :————.
   (ஈ) 1 ஆம் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட திகதி :————.
   (iv) ஏனைய தகைமைகள், யாதேனும் இருப்பின் :————.
11. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :————.
   (அ) பதவி :————.
   (ஆ) நிரந்தரமா, தற்காலிகமா? :————.
   (இ) உபகாரச்சம்பள உரித்துடையதா, அற்றதா? :————.
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா? :————.
   (உ) நிலையம்/வேலை இடம் :————.
   (ஊ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் :————.
   (எ) தற்போதைய திரட்டிய வருடாந்தச் சம்பளப்படி :————.
12. பாடசாலையிலிருந்து விலகிய காலந்தொடக்கம் பார்த்த உத்தியோகம்/பெற்ற பயிற்சி அல்லது இவை இரண்டும் பற்றிய விபரங்கள் (பின்வரும் முறையில் கொடுபடவேண்டும்)—

| நிலையத்தின்/ கல்லூரியின் பெயர் | சேவையில் சேர்ந்த திகதி | விலகிய/மாற்றப் பட்ட திகதி | வகித்த பதவி/ பெற்ற பயிற்சி | சேவைக்காலம் வரு. மா. நாள் | விலகியதற்கான/ மாற்றப்பட்டதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

13. படிப்பு லீவு யாதேனும் பெற்றிருப்பின் அது பற்றிய விபரங்கள் :————.
14. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள அதியுயர்ந்த தராதரப் பத்திரம் பற்றிய விபரங்கள் :————.

15. சட்டமுறை நீதிமன்றம் ஒன்றில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? (அங்ஙனமாயின், விபரங்கள் கொடுக்கவும்) :————.

16. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் இருந்து நீர் விலக்கப்பட்டீரா? (அங்ஙனமாயின், விபரங்கள் கொடுக்கவும்) ————.

17. யாதேனும் விசேட உரிமைகள் பற்றிய விபரங்கள் :————.

18. வர்த்தமானி அறிவித்தலின் (4) ஆம் பந்தியில் கொடுபட்டுள்ள கல்வித் தகைமைகளுள் எதற்கமைய நீர் தகுதியுடையவர்? :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். வேறு பிரதேசம் எதற்கும் நான் இன்னொரு விண்ணப்பம் அனுப்பவில்லை. இவ்விபரங்கள் எவையேனும் உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்தின் பின் காணப்படின் நட்ட ஈடின்றி சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

9–539—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைக் கல்விச் சேவைக்கு ஆட்சேர்த்தற்கான போட்டிப் பரீட்சை—1973 ஆம் ஆண்டு

மேற்குறித்த பரீட்சை சம்பந்தமாக 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பாகத் தெரிவிப்பது.

2. குறித்த பரீட்சையைப் பின்வரும் நிலையங்களில் நடத்துதற்கு ஒழுங்குகள் இப்பொழுது செய்யப்பட்டுள்ளன :

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, யாழ்ப்பாணம், அனுராதபுரம், கண்டி, நுவரேலியா, குருநாகல், சிலாபம், மட்டக்களப்பு, பண்டாரவளை, திருகோணமலை, அம்பாறை.

3. விண்ணப்பப் படிவத்தில் கொடுபட்டுள்ளதற்கமைய அவருடைய பாடசாலை அமைந்துள்ள பிரதேச கல்விப் பணிப்பாளரின் பிரிவுக்கிணங்க பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பரீட்சை நிலையத்தை மாற்றுமாறு எவ்வேண்டுகோளும் கவனிக்கப்படமாட்டாது.

பி. உடகம,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு.
1973 செப்ரெம்பர் 08.

9–523—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78.

---

## கல்வி அமைச்சு

### பல்தொழில்நுட்ப நிலையம், யாழ்ப்பாணம்—1974 ஆம் ஆண்டுப் பருவம்

யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிலையத்தில் 1974 ஆம் ஆண்டு கீழ்க்காணும் பயிற்சி நெறிக்கு மாணவர்களை அனுமதிக்கும் பொருட்டு தகுதிபெற்ற அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இழுபொறி இயந்திரவியல் (தமிழ் மொழி மூலம்) மாலை நேரம் ஒரு வருடம்.

2. தகவுத்திறன் தேவைகள் பின்வருமாறு :

(i) 8 ஆந் தர அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தாரதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி.

(ii) 1.1.74 அன்று 17 வயதுக்கு மேற்பட்டவராய் இருக்க வேண்டும்.

மு. கு.—செயல்முறை அனுபவம் : இழுபொறிகளைப் பேணுதலுடன் தொடர்புபட்ட வேலையில் விண்ணப்பதாரிகள் ஈடுபட்டிருக்க வேண்டும்.

3. (i) இப்பயிற்சி நெறிக்கான அனுமதி ஒரு பிரவேசப் பரீட்சை/வாய்மொழிப் பரீட்சை அல்லது இவ்விரு வகைப் பரீட்சைகள் மூலம் தீர்மானிக்கப்படும். இப்பரீட்சைக்குரிய திகதிகள் பரீட்சார்த்திகளுக்குக் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

(ii) அபேட்சகர்கள் தமது பிரவேசப் பத்திரங்களை, இவ்வறிவித்தலின் கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமைய அரைத்தாளில் தயாரிக்கவேண்டும்.

(iii) பூரணப்படுத்தப்பட்ட பிரவேசப் பத்திரங்கள் 20.10.1973 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "அதிபர், பல்தொழில்நுட்ப நிலையம், பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(iv) சாதனங்கள் ஒன்றும் பிரவேசப் பத்திரத்துடன் இணைத்தனுப்பப்படலாகாது.

4. புகுமுகப் பரீட்சைக்கான பாடங்கள்

(அ) இயந்திரவியல் பற்றிய பொது அறிவு.

(ஆ) எண்கணிதம் (எட்டாந் தரத்துக்கான எண்கணித பாடத்திட்டம்.)

5. ஒவ்வொரு வருடமும் விதிக்கப்பட்டுள்ள 9 மாத கற்கையின் பொருட்டு மாணவர் ஒவ்வொருவரிடமிருந்தும் மாதாந்தம் ரூ. 5/- அறவிடப்படும்.

ரீ. ஓ. பி. பர்னாந்து,
கல்விப் பணிப்பாளர்,
(தொழில்நுட்பக் கல்வி)
கல்வி மா அதிபதிக்காக.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973.9.10.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

பல்தொழில்நுட்ப நிலையம், யாழ்ப்பாணம்—பிரவேசப் படிவம்

1. அபேட்சகரின் முழுப்பெயர் :————.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
3. பூரண அஞ்சல் முகவரி :————.
4. பிறந்த திகதி :————.
5. நாட்டினம் :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள இடம் :————.
8. உறுதிப்படுத்தல் :

அபேட்சகர் தனது ஒப்பத்தை வேலை கொள்பவரின் அல்லது இணைக்கள தலைவரின் முன்னிலையில் இட வேண்டும்.

————,
அபேட்சகரின் ஒப்பம்.

எனக்குக் கீழ்/எனது தாபனத்தில் வேலை செய்பவரான மேற்குறித்த அபேட்சகர் தனது ஒப்பத்தை என் முன்னிலையில் இன்று இட்டாரென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————,
உறுதிப்படுத்துபவரின் ஒப்பம்.
பதவிப் பெயர் :
அல்லது அந்தஸ்து :

உறுதிப்படுத்துபவரின் பெயர் :
முகவரி :
திகதி :

2-540—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78.

### இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

வர்த்தகவியற் தராதரப் பத்திரப் பரீட்சை—இப்பரீட்சை 1973 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆந் திகதி ஆரம்பமாகும்

### பிரமாணங்களும் பாடத்திட்டமும்

**அறிமுகம்.**—இப்பரீட்சைக்குரிய பிரமாணங்கள் வர்த்தகப் பரீட்சைச் சபையினால் ஆக்கப்பட்டுள்ளன. இச்சபை இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி அதிபரையும், அரசகரும மொழித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரையும், பரீட்சை ஆணையாளரையும் கொண்டுள்ளது. இப் பரீட்சை மேற்படி சபையின் சார்பில் பரீட்சை ஆணையாளரினால் நடத்தப்படும்.

2. பரீட்சை நடக்கும் இடங்கள்—

(1) இப்பரீட்சை பின்வரும் இடங்களில் நடத்தப்படும் :

கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி, குருநாகல், அநுராதபுரம், களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு.

(2) பரீட்சார்த்திகள் தாம் விரும்பிய இரண்டு இடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். போதிய அளவு பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காத இடங்கள் நீக்கப்படும்.

(3) பரீட்சார்த்தியால் தெரிவு செய்யப்பட்ட இடம் சாதாரணமாக மாற்றப்பட மாட்டாது. எனினும், விசேஷ கஷ்டங்கள் ஏற்பட்டுள்ள விடத்து, போதிய அளவு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பின் அது பற்றிக் கவனிக்கப்படும்.

3. **தகைமை.**—ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தராதரப் பத்திரங்களில் ஒன்றையாவது பெற்றிருத்தல் வேண்டும் :—

(1) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (தமிழ் மொழியில் பெற்ற சித்தி உட்பட) ;

(2) க. பொ. த. ப. (சாதாரணதர)ப் பரீட்சையில் ஒரேமுறையில் பின்வரும் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் :

(அ) தமிழ்மொழி ;

(ஆ) எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது தூயகணிதம் ;

(இ) வேறு மூன்று பாடங்கள்.

(3) க. பொ. த. ப. (சாதாரணதர)ப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் பின்வரும் பாடங்களில் பெற்ற சித்திகளுடன் :

(அ) தமிழ்ப்பாஷை (திறமை).

(ஆ) பின்வரும் பாடங்களுள் மூன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவற்றில் ஒன்று திறமைச் சித்தியாயிருத்தல் வேண்டும் :

| | |
|---|---|
| கணக்குப் பதிவியல் | வர்த்தக எண்கணிதம் |
| தட்டெழுத்து | பொருளியல் |
| சுருக்கெழுத்து | புவியியல் |
| ஆரம்ப வர்த்தகம் | தமிழ் இலக்கியம் |

ஒரு இரண்டாம் மொழி (சிங்களம் அல்லது ஆங்கிலம்).

**கவனிக்க.**—இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பொழுது ஒரு பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவரைத் தகுதியுடையவராக்குவதற்குத் தேவையான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரு பரீட்சைக்குத் தோற்றிவிட்டு முடிவை எதிர்பார்த்திருப்பது ஒரு பரீட்சார்த்தியைத் தகுதியுடையவராக்கமாட்டாது. அத்தகைய பரீட்சார்த்திகளிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. பரீட்சைக்குப் பிரவேசித்தல்—

(1) இப்பிரமாணங்களுக்கு, இயைபுடையவர்களாய்க் கேட்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தும் எல்லாப் பரீட்சார்த்திகளும் எழுத்துப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

(2) அத்தகைய அனுமதி அவருடைய தகைமை ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டதெனப் பொருள்படாது. இப்பிரமாணங்களுக்கேற்பத் தகுதியற்றவரெனக் காணப்படும் எப்பரீட்சார்த்தியும்—பரீட்சைக்கு முன்னரோ அன்றேல் பரீட்சை நடைபெறும்பொழுதோ அதன் பின்னரோ—எப்பருவத்திலும் தகைமையற்றவராக்கப்படுவர். அத்தகைய ஒரு பரீட்சார்த்திக்கு ஒரு தராதரப் பத்திரம் வழங்கப் பட்டிருப்பின் அது திருப்பி அழைக்கப்பட்டு ரத்துச் செய்யப்படும். நேர்மையீனமாக ஏதேனும் செய்கைக்குக் குற்றவாளியாகக் காணப்படும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு எப்பரீட்சைக்கும் தோற்றுதபடி தடை விதிக்கப்படுவர்.

5. விண்ணப்பப் படிவங்கள்—

(1) இப்பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படமாட்டாது. இவ்வறிவித்தலின் கடைசியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை 8″ × 13″ அளவினுலான தாளில் இரு பக்கங்களிலும் முறைப்படி தயாரித்துப் (தட்டச்சில் பொறித்தல் நன்று) பாவித்தல் வேண்டும். முறைப்படி நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக “ பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 2 ” என்ற முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரும் விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையமும் எழுதப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(3) விண்ணப்பதோடு வேறு எப்பத்திரமும் அனுப்பப்படலாகாது.

6. **பரீட்சைக் கட்டணங்கள்.**—ஒவ்வொரு பரீட்சை சம்பந்தமாகவும் கீழே கூறப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| (அ) வர்த்தக தராதரப் பத்திரம் (கணக்குப் பதிவியல்) .. | 35 | 0 |
| (ஆ) வர்த்தக தராதரப் பத்திரம் (தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்) .. .. .. | 35 | 0 |
| (இ) ஒரு பாடத்திற்கு மட்டும் .. .. | 10 | 0 |
| (ஈ) வர்த்தக தராதரப் பத்திரம் (கணக்குப் பதிவியல்) வர்த்தக தராதரப் பத்திரம் ஒரே தடவையில் தோற்றுவதாயின் (தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்) .. | 50 | 0 |

7. விண்ணப்பப் படிவத்தை நிராகரித்தல்—

(1) பின்வரும் வகைகளைச் சேர்ந்த விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பித்தவர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படும் :—

(அ) பூர்த்தி செய்யப்படாதனவாய், அல்லது பிழையானவையாய், அல்லது வேறு ஏதேனும் வகையில் பிரமாணங்களுக்கு இயையாதவையாய் உள்ள விண்ணப்பப் படிவங்கள் ;

(ஆ) கேட்கப்பட்ட கட்டணத்துக்கான முத்திரைகள் இன்றி அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ;

(இ) விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதிக்குப் பின்னர் வந்துசேரும் விண்ணப்பப் படிவங்கள்.

(2) மேற்கூறிய (அ), (ஆ), (இ) பிரிவுகளின் கீழ் எவரேனும் ஒருவருடைய விண்ணப்ப வடிவம் பிழையானதாயிருக்குமிடத்து அவர் பரீட்சைக்கமர்ந்தால், அவருடைய பரீட்சார்த்தித் தகைமை நீக்கப்படும்.

(3) ஒரு விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படுங்கால் முத்திரைக் கட்டணம் அரசாங்கத்துக்குரியதாகும்.

8. **கட்டணப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தல்.**—ஒரு முறை செலுத்தப்பட்ட கட்டணப் பணம் முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ திருப்பிக் கொடுபடமாட்டாது. எனினும், பரீட்சார்த்தியினுடைய மரணத்தின் அல்லது மிகவும் கடுமையான நீண்டகாலச் சுகவீனத்தின் (உதாரணமாக : கசநோய், பாரிசவாதம், மூளை அல்லது நரம்புக் கோளாறு முதலியன) விஷயத்தில், பரீட்சார்த்தி ஒரு பாடத்திற்கும் தோற்றுமலும், பரீட்சை ஆணையாளர் திருப்தியடையக்கூடிய முறையில் ஒரு வைத்திய அத்தாட்சிப் பத்திரம், அல்லது மரண அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டும் இருப்பின் முழுக் கட்டணமும் திருப்பிக் கொடுக்கப்படலாம். கட்டணப் பணத்தைத் திருப்பிக் கோரும் விண்ணப்பம் பரீட்சைக் கடைசித் தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ் விண்ணப்பத்தில் பெயர், முகவரி, சுட்டிலக்கம், பரீட்சை இடம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் அனுப்பப்படுகின்ற கட்டணப் பணத்தைத் திருப்பிக் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

9. **அனுமதி அட்டைகள்.**—பரீட்சை ஆரம்பமாவதற்கு 7 நாட்களுக்கு முன்னர், அனுமதி அட்டைகளைத் தபாலில் அனுப்பியது பற்றிய அறிவித்தல் புதினப்பத்திரிகை, வானொலி என்பவற்றின் மூலம் கொடுக்கப்படும். அத்தகைய அறிவித்தலை எல்லாப் பரீட்சார்த்திகளும் கவனமாகக் கேட்டு அதிற் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கிணங்கப் பரீட்சைக் கருமங்களைச் செய்தல் வேண்டும்.

எப் பரீட்சார்த்திக்காவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அவர் உடனேயே பரீட்சை ஆணையாளர், மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு (த. பெ. இல. 1503, தந்தி முகவரி : பரீட்சைகள், கொழும்பு 2) அனுமதி அட்டை கிடைக்கவில்லையென அறிவித்தல் வேண்டும். தந்தி மூலம் இங்ஙனம் அறிவிப்பது மிகவும் நல்லது. இயலுமாயின்

நேரில் வருவது நன்று. பின்வரும் விவரங்களைத் தெரிவிப்பது அவசியமாகும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(3) பூரண முகவரி ;

(4) பரீட்சைக்கமர்வதற்காக விண்ணப்பித்த பரீட்சை இடம் ;

(5) விண்ணப்பப் படிவம் அனுப்பிய தேதி, பதிவு செய்த தபாற் கந்தோர், பதிவு இலக்கம்.

10. **அடையாளப் பத்திரங்கள்.**—ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தான் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின்போதும், பரீட்சை மண்டபத்துக்குப் பொறுப்பாயிருக்கும் மேற்பார்வையாளர், திருப்தியடையக்கூடிய முறையில் தான் இன்னாரென்பதை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டுப் பின்வரும் பத்திரங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) தபாற் பகுதித் தலைவரால் வழங்கப்படும் அடையாளப் பத்திரங்கள் ;

(ஆ) இப் பரீட்சை நடைபெறும் தினத்துக்கு முன் மூன்று வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துள் வழங்கப்பட்ட ஒரு வலுவுள்ள வெளிநாட்டுப் பிரயாண அனுமதிப்பத்திரம் ;

(இ) இப்பரீட்சை நடைபெறும் தினத்துக்கு முன் மூன்று வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துள், ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச் சட்டமுறையான வேறு ஸ்தாபனத்தின் அதிகாரத்தின் பேரில் வழங்கப்பட்டதும், அதனை வைத்திருப்பவருடைய ஒரு புகைப்படத்தைக் கொண்டுள்ளதுமான ஏதேனும் தராதரப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது வேறு பத்திரம் ;

(ஈ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிமுக அட்டை.

(உ) ஒரு கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்குத் தகைமையுடைய ஒருவரால் அதனுடைய பின்பக்கத்தில் செய்யப்பட்ட பின்வரும் அத்தாட்சிப்பத்திரத்தோடு கூடிய ஒரு வெளிநாட்டுப் பிரயாண அனுமதிப் பத்திர அளவுடைய புகைப்படம் ;

இதனுடைய மறுபக்கத்தில் தோன்றும் புகைப்படம் ..............

.............................................. இன் புகைப்படமென
(பரீட்சார்த்தியின் முழுப் பெயர்)

வும், அவருடைய மாதிரிக் கையொப்பம் கீழே காட்டப்பட்டுள்ளதெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

..........................................
பரீட்சார்த்தியின் வழமையான கையொப்பம்.

..........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

..........................................
பெயரும் பதவியும்.

தேதி : ..................................

ஒரு பரீட்சார்த்தி மேலே குறிப்பிடப்பட்ட பத்திரங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறின், அவருடைய பரீட்சார்த்தித் தகைமை தற்காலிகமானதாகக் கொள்ளப்படுவதுடன் பரீட்சை ஆணையாளரினுடைய தீர்மானத்தின்படி ரத்துச் செய்யவும் படலாம்.

11. **பரீட்சைத் திட்டம்.** —

(1) (கணக்குப்பதிவியல்) வர்த்தகத் தராதரப் பத்திரத்தைப் பெற்றுள்ள ஒரு பரீட்சார்த்தி பின்வரும் ஒரு சந்தர்ப்பத்தில் தட்டெழுத்து (5), சுருக்கெழுத்து (6) என்ற பாடங்களுக்குத் தோற்றி ஒரே முறையில் அவ்விரு பாடங்களினும் சித்தியடைந்து (சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்) வர்த்தகத் தராதரப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

(2) (சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்) வர்த்தகத் தராதரப் பத்திரத்தைப் பெற்றுள்ள ஒரு பரீட்சார்த்தி பின்வரும் ஒரு சந்தர்ப்பத்தில் வர்த்தக எண்கணிதம் (3), கணக்கியல் (4) என்ற பாடங்களுக்குத் தோற்றி ஒரே முறையில் அவ்விரு பாடங்களினும் சித்தியடைந்து (கணக்குப் பதிவியல்) வர்த்தக தராதரப் பத்திரத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

(3) ஒரே பரீட்சையில் தேவையான ஆறு பாடங்களினும் சித்தியடைந்து, வர்த்தக தராதரப்பத்திரம் (கணக்குப் பதிவியல்), வர்த்தக தராதரப் பத்திரம் (சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்) என்னும் இரண்டையும் பெற்றுக் கொள்ளலாம்.

(4) ஒவ்வொரு விடைத்தாளிலும் தெளிவற்ற எழுத்துக்காக ஆகக் குறைந்தது 10% புள்ளிகள் குறைக்கப்படும்.

(5) பரீட்சைக்குரிய பாடங்கள் பின்வருமாறு :—

1. தமிழ்மொழி
2. வர்த்தகமும் நிதியும்
3. வர்த்தக எண்கணிதம்
4. கணக்கியல்
5. தட்டெழுத்து
6. சுருக்கெழுத்து

(1) வர்த்தக தராதரப் பத்திரம் (கணக்குப் பதிவியல்) :

இத் தராதரப் பத்திரத்தைப் பெறுவதற்கு ஒரு பரீட்சார்த்தி பின்வரும் நான்கு பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் :—

| | | |
|---|---|---|
| 1. தமிழ்மொழி | .. | 3 மணி |
| 2. வர்த்தகமும் நிதியும் | .. | 6 மணி |
| 3. வர்த்தக எண்கணிதம் | .. | 3 மணி |
| 4. கணக்கியல் | .. | 3 மணி |

(2) வர்த்தக தராதரப் பத்திரம் (சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்) :

இத் தராதரப் பத்திரத்தைப் பெறுவதற்குப் பின்வரும் நான்கு பாடங்களிலும் சித்தியடைதல் வேண்டும் :—

| | | |
|---|---|---|
| 1. தமிழ் மொழி | .. | 3 மணி |
| 2. வர்த்தகமும் நிதியும் | .. | 6 மணி |
| 3. தட்டெழுத்து | .. | 3 மணி |
| 4. சுருக்கெழுத்து | | |

12. **பாடங்கள் பற்றிய பாடத்திட்டம்.**—

(1) தமிழ் மொழி, (2) வர்த்தகமும் நிதியும் என்ற பாடங்களுக்கான பாடத்திட்டங்களும், வினாப்பத்திரங்களும் இரண்டு தராதரப் பத்திரங்களுக்கும் ஒன்றேயாம்.

**(1) தமிழ்மொழி (3 மணி)**

(1) இலக்கண முறையாகவும், திருத்தமாகவும் எளிய தமிழில் தெளிவாக எழுதக்கூடிய திறமை பரீட்சார்த்திக்குண்டா என்பதைப் பரீட்சிக்கும் பொருட்டுக் கொடுக்கப்படும் பல விஷயங்களில் ஒன்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதல்.

(பரீட்சார்த்தியினுடைய கற்பனுசக்தி, சிந்திக்கும் ஆற்றல், தர்க்கம், விவரிக்கும் ஆற்றல் ஆகியவற்றைப் பரீட்சிப்பதற்காகத் தயாரித்தளிக்கப்படும் இந்த அப்பியாசத்துக்கு ஒரு மணித்தியாலத்தைச் செலவிடலாம்)

(2) ஒரு வியாபாரக் கடிதம் அல்லது ஓர் அறிக்கை எழுதுதல். (இந்த அப்பியாசத்துக்கு 30 நிமிடங்களைச் செலவிடலாம்).

(3) ஒரு வசனப் பகுதியைச் சுருக்கி எழுதுதல் (பரீட்சார்த்தியினுடைய விளங்கிக்கொள்ளும் ஆற்றலையும், கருத்தை விளக்கும் ஆற்றலையும் பரீட்சிப்பதற்காகத் தயாரித்தளிக்கப்படும் இந்த அப்பியாசத்துக்கு ஏறக்குறைய 45 நிமிடங்களைச் செலவிடலாம்).

(4) ஒரு வசனப் பகுதியினுடைய கருத்து, நயம் முதலியவற்றைப் பற்றிய ஓர் அப்பியாசம்.

(5) பின்வருவன எல்லாவற்றையும் பற்றிய அல்லது அவற்றுள் சிலவற்றைப் பற்றிய இரண்டு அப்பியாசங்கள் :—

சொற்கள், சொற்றொடர்களின் கருத்துக்கள், வசனங்கள், அவற்றின் கருமங்களும் உட்தொடர்புகளும், எழுத்து, வன்மை, வாக்கியங்களை அமைத்தல், இலக்கணம் மொழியமைப்பிற் பிழைகள்.

**(2) வர்த்தகமும் நிதியும் (வர்த்தகப் புவியியல் உட்பட) வினாப்பத்திரம் 1 (3 மணி).**

விசேஷமாக இலங்கை, தெ. கி. ஆசியா, பொது நலக் குடியரசு நாடுகள் என்பவை சம்பந்தமாக, உலகின் வியாபாரமும், கைத்தொழில்களும் பற்றிய புவியியல்—

(அ) தலைப்பட்டினங்கள், துறைமுகங்கள், உற்பத்தி மத்தியஸ்தானங்கள்.

(ஆ) பிரதான கடல், ஆகாய, புகையிரதப் பாதைகள்.

(இ) பிரதான மூலப் பொருள்கள், உணவுப் பொருட்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் என்பன பரம்பலாகும் விதத்தைக் காட்டுகின்ற புவியியற் படங்கள் பற்றிய சிறந்த அறிவு, இலங்கைக்கும் வேறு தேசங்களுக்குமிடையில் பண்டமாற்றுச் செய்யப்படும் பிரதான வர்த்தகப் பொருட்கள் பற்றிய அறிவு. பரீட்சார்த்திகள் புறவுருவப் படங்கள் வரையக்கூடிய திறமையுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

**உள்ளூர் வியாபாரம்.**—பொருள்களின் விற்பனவும், கொள்வனவும், அவற்றோடு சம்பந்தப்பட்ட ஆவணங்களும், கொடுப்பனவு முறைகள்.—காசோலைகள், காசுக்கட்டளைகள், மாற்றுண்டியல்கள் முதலியன. பொருட்களைக் கொண்டுசெல்லல், ஏற்படக்கூடிய அபாயங்கள், காப்புறுதி செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள், தீ மற்றும் (ஆயுள்காப்புறுதி தவிர்ந்தமற்றைய) வெவ்வேறினக் காப்புறுதிகளுக்கான பொதுத் தத்துவங்கள். ஒழுங்குப்பத்திரங்கள் சம்பந்தமாக, அத்தாட்சிப்படுத்திய உரிமை மாற்றங்கள். ஒழுங்குப் பத்திரங்களும் சாட்டுதல் முதலியனவும், வாடகைக் கொள்வனவு ஒழுங்குமுறை, வியாபாரியின் வசமுள்ள பொருட்களின் மீது கட்டுப்பாடு.

**பிறநாட்டு வியாபாரம்.**—வியாபாரி, இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், மீள்-ஏற்றுமதியாளர், தரகு முகவர்கள், தரகர்கள் அனுப்பிவைக்கும் முகவர்கள் ; சம்பந்தப்பட்ட ஆவணங்கள் உட்பட, கடல் மார்க்கமாகவும் ஆகாயமார்க்கமாகவும் பொருட்களைக் கொண்டு செல்லுதல்.

**கப்பற் குத்தகைப் பத்திரம்.**—வார்நாமமும், கடலபாய நட்ட ஈட்டின் மூலாதாரமும், பொதுவான, சிறப்பான சராசரி, சுங்க உள்நாட்டுத் தீர்வைகள் ; சுங்கப் பண்டகசாலைகள் ; கலத்தானவுரிமைச் சீட்டு ; ஒப்படைப்புக் கட்டளை, பொருட்களுக்காகப் பணங்கொடுக்கும் முறைகள் ; விளைபொருள் பண்டமாற்றுக்கள் ; தொழின்முயற்சிகளில் அரசாங்கம் பங்குபற்றல் அல்லது வெளிநாட்டு வியாபாரத்துக்கும் சந்தைகளுக்கும் அரசாங்க உதவி.

### வினாப்பத்திரங்கள் II (3 மணி)

**தொழில் அலகும் அதனுடைய நிர்வாகமும்.**—தொழில் ஸ்தாபனங்களின் இயல்பும், அமைப்பும், தனி வியாபாரி, பங்குடமைகள், பொதுக் கொம்பனிகளும், தனிப்பட்ட கொம்பனிகளும், கூட்டுறவுச் சங்கங்கள், சேர்க்கைகள் நம்பிக்கைச் சொத்துக்கள் பங்குத்தொகுதிகள், பங்குகள், தொகுதிக்கடன்கள், ஈடுகள், நீண்டகால, குறுகிய காலக் கடன் வாங்கல்களுக்கான பணமும் மூலதனமும், வியாபாரக் கணக்குகளின் சொற்பொருள் விளக்கம், மொத்த விற்பனவு கொள்முதல், மொத்த இலாபம், மேலதிகச் செலவுகள், தேறிய இலாபம், இக்காரணிகள் உட்தொடர்பு, தொழிலின் நிதி, மூலதன அமைப்பு என்பவற்றின் மீது வரி விதிப்பதன் விளைவு, தொழிலினுள் இலாபங்களைப் பகிர்ந்தளித்தலும், தடுத்து வைத்தலும், உற்பத்தி பொருட்களும் புள்ளி விபரத் தகவலும், தொழிற் பயிற்சியளித்தலும் தொழிலாளர் வேதனங்களோடு சம்பந்தப்பட்ட பிரதான பிரச்சினைகளும், மூலப் பொருட்களைச் சந்தைப்படுத்தல், பெற்றுக்கொள்ளல் சம்பந்தமான தத்துவங்கள்.

**நிதியும் வங்கித் தொழிலும்.**—நாணய அலகு, வங்கித் தொழில் ஒழுங்கு, கூட்டுப் பங்குத் தொகுதி, வங்கித் தொழிலின் வளர்ச்சி, மத்திய வங்கியின் நிலையும் அதனுடைய கருமங்களும், வங்கி வீதம், பகிரங்கச் சந்தை வேலைகள், நீண்டகால குறுகியகால வட்டிவீதம், இலண்டன் பங்கு முதன்மாற்று, பங்குத் தொகுதிகளும், பங்குகளும் சம்பந்தமான உள்ளூர் வழக்கங்கள்.

### (3) வர்த்தக எண்கணிதம் (3 மணி)

விகிதசமன், கழிவு, பங்குத் தொகுதிகளும் பங்குகளும், இலாப நட்டம், கூட்டுவட்டி (கடன்களைத் திருப்பிக்கொடுப்பதற்கு அதனுடைய பிரயோகம் உட்பட) மடக்கைகளின் உபயோகம் (குறிப்பாக, கூட்டுவட்டி, காப்புறுதி, ஆண்டுத் தொகைகள் என்பவற்றுக்குப் பிரயோகமாதல்). உள்நாட்டு வெளிநாட்டு உண்டியல் கொடுக்கல் வாங்கல்கள், மாற்று வீதங்கள், பணச்சந்தை, மீற்றர் முறையும் நாணயங்களும். புள்ளி விவர வரைப்படங்கள், சாதனங்கள்.

**கவனிக்க.**—மடக்கை வாய்ப்பாடுகளை உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்படும். (இவ்வினாப்பத்திரத்திலுள்ள பிரச்சினைகள் க. பொ. த. ப. (சாதாரணதர) வினாப்பத்திரங்களிலுள்ள பிரச்சினைகளிலும் பார்க்கக் கடினமானவை).

### (4) கணக்கியல் (3 மணி)

அதனுடைய தத்துவங்கள்

(1) ஒற்றைப் பதிவு.—ஒற்றைப் பதிவு என்பதன் கருத்து, அதனுடைய பூரணமற்ற தன்மை உபயோகிக்கப்படும் நூல்கள்.

(2) இரட்டைப் பதிவு.—இரட்டைப் பதிவு விதிகள், சாஸ்திர ரீதியான முறைகள், எல்லா வகையான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் இயைபுபடுத்தப்படும் தன்மை, ஒற்றைப் பதிவிலும் பார்க்க எங்ஙனம் மேலானது என்பது.

உபயோகிக்கப்படும் புத்தகங்கள்.—பல்வேறு வகையான காசேடுகளின் உபயோகங்கள், விற்பனவுப் புத்தகங்கள் கொள்வனவுப் புத்தகங்கள், நாட்குறிப்புக்கள், பேரேடுகள், துணையேடுகள், பல்வேறு தொழில் முயற்சிகளுக்கு உபயோகிக்கப்படும் விசேஷ புத்தகங்கள்.

தற்சமனுக்கும் பேரேடுகள் சம்பந்தமாக " நிரன்முறையும் ", " பிரிவு முறையும் ".

உபயோகிக்கப்படும் பதங்கள்.—மூலதனம், கடன்கள், தொகுதிக்கடன்கள், ஈடுகள், மேலதிகப்பற்று, கடன் கொடுத்தவர்கள், பெயருள் கணக்குகளும், பெயர் மாத்திரைக் கணக்குகளும், பெயரளவிற் கணக்குகளும், சென்மதியுண்டியல், வருமதியுண்டியல், கழிவுகள், வட்டி, மொத்தக் கடன்கள், சொத்துக்கள் கடன்வாங்கியவர்கள், பங்குத் தொகுதிகள், இலாப நட்டம், (சாதாரண, முன்னுரிமை, தவணையிட்ட) பங்குகள், வாடகை, இறை, குத்தகைகள், தவணைக் கட்டணங்கள், பெறுமானத் தேய்வுகள், ஆழ்நிதிகள், பொறுப் பொதுக்கம், பொறிகள், மாறுத செலவுகள், உழவு கூலி, பயிர்கள், ஒப்படைகள், முதலீடுகள், ஒதுக்கு நிதிகள் என்பனபோன்ற உபயோகிக்கப்படும் சொற்களின் கருத்தும் இயல்பும்.

கணக்குச் சமப்படுத்தல்.—விதிக்கப்பட்ட ஒருகால எல்லையின் கணக்குக்களைச் சமப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படும் முறைகள், வியாபாரக் கணக்குகள், இலாப நட்டக்கணக்குகள், ஐந்தொகைகள் என்பனவற்றைத் தயாரித்தல்.

ஒரு குறிப்பிட்ட தொழிலில் மாற்றங்கள்.—தேவையான புத்தகங்களும், அவற்றை எழுதிவரும் முறைகளும் கடைக்காரர்கள், பரும்படியான உற்பத்தியாளர்கள், மாநகரசபைக் கூட்டுத்தாபனங்கள், வியாபாரிகள், நட்டவீட்டுக் கொம்பனிகள், கப்பற்சொந்தக்காரர்கள், தரகர்கள், கூட்டுப் பங்குத் தொகுதிக் கொம்பனிகள், விசேஷமாக ஒரு தொழிலைக் கொள்வனவு செய்தல், ஒழிப்பு, ஒன்றுக்கல் என்பனபோன்ற வெவ்வேறு தொழில் முயற்சிகளில் கணக்குகளை எழுதிக்கொள்ளும் முறைகள்.

### (5) தட்டெழுத்து (3 மணி)

(1) வெவ்வேறு வகையிற் கஷ்டமான பகுதிகளையும், தொழில் நுட்ப வர்த்தக, சட்ட, அட்டவணைக் கூற்றுக்களையும் பிரதிபண்ணுமாறும்,

(2) தெளிவாக எழுதப்படாததும், வாசிப்பதற்குக் கஷ்டமானதுமாயுள்ள ஒரு கையெழுத்துப் பிரதியைத் தட்டெழுத்திற் பொறிக்கும்படியும், பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்படும். பிரதிபண்ணவும், தட்டெழுத்திற் பொறிக்கவும் பரீட்சார்த்திகளுக்குத் தெரிந்திருத்தல் வேண்டும். ஒரு தட்டெழுத்தாளருக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டிய ஒரு பொது விஷயம் வினாத்தாளில் சேர்த்துக் கொள்ளப்படும். 10 நிமிட வேகப் பரீட்சை ஒன்றும் சேர்த்துக்கொள்ளப்படும். ஒரு நிமிடத்துக்கு மிகக் குறைந்தது 25 சொற்களாவது தட்டெழுத்திற் பொறிக்கக்கூடியவராயிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரீட்சார்த்திகள் எந்த இதனத்தையாவது சேர்ந்த ஒரு தட்டெழுத்துப் பொறியை உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். தட்டெழுத்துப் பொறிகள் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது. ஆகையால் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு வரும்பொழுது தமது சொந்தத் தட்டெழுத்துப் பொறிகளைக் கொண்டுவருதல் வேண்டும்.

### (6) சுருக்கெழுத்து

நிமிடத்திற்கு 70 சொற்கள் வீதம் 5 நிமிட நேரத்திற்கு வாசிக்கப்படும் ஒரு பகுதியையும், நிமிடத்திற்கு 80 சொற்கள் வீதம் 5 நிமிட நேரத்திற்கு வாசிக்கப்படும் வேறொரு பகுதியையும் சுருக்கெழுத்தில் எழுதி, அவ்விரு பகுதிகளையும் சாதாரண எழுத்துக்களில் மாற்றியெழுதல். மாற்றியெழுதுவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 7 சொற்களுக்கு 1 நிமிடம் ஆகும்.

பரீட்சார்த்தியினுடைய திறமையை மதிப்பிடும்பொழுது, சரியாக எழுத்துக் கூட்டல், குறியீடுகள், மாற்றியெழுதுகையில் எழுத்துப் புனிதம் ஆகியன கவனத்திற் கொள்ளப்படும்.

13. **பெறுபேறுகள்.**—பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பரீட்சார்த்திகட்கும் அவரவர் சித்தியடைந்த, சித்தியடையாத பாடங்களைக் குறிக்கும் பெறுபேற்று அட்டவணைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

14. **ஏனைய விவரங்கள்.**—இப்பிரமாணங்களிற் கூறப்படாத வேறு ஏதேனும் ஒரு விஷயத்தைத் தீர்மானிப்பதற்கு, பரீட்சை ஆணையாளர் வர்த்தகப் பரீட்சைச் சபையின் சார்பில் தனது தீர்ப்பை உபயோகிப்பார்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆடு செப்ரெம்பர் மீ 14 ந் உ.

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

வர்த்தகவியற் தராதரப் பத்திரப் பரீட்சை—1973

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. பரீட்சார்த்தியின் பெயர் :————.
 (அ) வழமையான கையொப்பம் :————.
 (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
 (பெரிய எழுத்துக்களில்)
 (வண./திரு./திருமதி/செல்வி—பொருத்தமற்றதை வெட்டி விடுக)
 (இ) முதலெழுத்துகள் குறிக்கும் பெயர்கள் :————.
 ஆண்/பெண் :————.

2. முகவரி :————.
 (பெரிய எழுத்துக்களில்)

3. பரீட்சை நிலையம் :—.
 முதற் தெரிவு :————. இரண்டாம் தெரிவு :————.

4. **(1) நீர் எத்தராதரப் பத்திரத்திற்கு/தராதரப் பத்திரங்களுக்குத் தோற்றுகிறீர் ?**
 *(அ) கணக்குப் பதிவியற் தராதரப் பத்திரம்.
 *(ஆ) தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் தராதரப் பத்திரம்.
 *(இ) இரண்டும்.
 *தேவையற்ற சொற்களை வெட்டி விடுக.

 **(2) மேற்படி பரீட்சையில் பூரண வர்த்தக தராதரப் பத்திரம் பெற்றுள்ள பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் :**
 (அ) பெற்ற தராதரப்பத்திரத்தின் பெயர் :————.
 (ஆ) சித்தியடைந்த வருடம் :————.
 (இ) சுட்டிலக்கம் :————.
 (ஈ) தராதரப் பத்திரத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தற்பொழுது தோற்றும் மேலதிக பாடங்கள் .—
 1 :————. 2 :————.

5. பரீட்சைக் கட்டணம் :————.

**முத்திரைகளை ஒட்டும் கூடு**

**கவனிக்க.**—முத்திரைகளை ஒன்றின் மேல் ஒன்றாக ஒட்டற்க. இங்கே தேவையான முத்திரைகளை ஒட்டிப் பரீட்சார்த்தி தனது கையொப்பத்தையும் திகதியையுமிட்டு அவற்றைப் பயனற்றதாக்க வேண்டும்.

இங்கே ஒட்டப்பட்ட முத்திரைகள் முன்னர் பயன்படுத்தப்படாத தூய்மையான முத்திரைகள் என உறுதி கூறுகிறேன்.

கையொப்பம் :————.

6. (1) தமிழ்ப் பாஷையுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றிருப்பின் அதன் விபரங்கள் —.
 (அ) வருடமும் மாதமும் :————.
 (ஆ) பரீட்சை நிலையம் :————.
 (இ) சுட்டிலக்கம் :————.
 (ஈ) தராதரப் பத்திர இல. :————.

 (2) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சையிற் சித்தி பெற்றிருப்பின் அதன் விபரங்கள் .—
 (அ) வருடமும் மாதமும் :————.
 (ஆ) பரீட்சை நிலையம் :————.
 (இ) சுட்டிலக்கம் :————.
 (ஈ) தராதரப் பத்திர இல. :————.
 (உ) சித்தியடைந்த பாடங்கள் .—
 1. ————. 5. ————.
 2. ————. 6. ————.
 3. ————. 7. ————.
 4. ————. 8. ————.

7. பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று :

இவ்விண்ணப்பத்திற் தரப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் பரீட்சை ஆணையாளரினால் இப்பரீட்சை சம்பந்தமாகப் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

————,
கையொப்பம்.

திகதி :————.

இப்பத்திரத்தில் கேட்கப்பட்டுள்ள உறுதிக்கூற்றை அரசாங்க கல்வி அதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர், அல்லது அத்தகைய பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர், அப்பகுதியின் கிராம சேவகர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண அதிகாரி, வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு, 4,800 ரூபாவையேனும் அதற்கு மேற்பட்ட தொகையையேனும் வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர், அல்லது தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணை பெற்ற உத்தியோகத்தர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, தலைமைப் பிக்கு, வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாக உள்ள மத குருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோர்களில் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

........................ ஆகிய நான், மேற்குறிப்பிட்ட பரீட்சார்த்தி ...................... என்னுமிடத்தில் வதிபவர் என்றும், எனக்கு அவரை நன்கு தெரியுமென்றும் 197...... ம் ஆண்டு .............. மாதம் ...... ந் திகதி எனது முன்னிலையிற் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் உறுதி கூறுகிறேன்.

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் :————.

பதவி :————.

முகவரி :————. திகதி :————.

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லா பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விருப்பப்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமென பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும் ; எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரச சேவைகள் ஆலோசனைச் சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுது அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ்செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்மானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணத்திலாயத்துக்குப்பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ ஒழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கைவழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைபையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக்கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல், முதலியவற்றை கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்தி எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறு ஒருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல் பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிருபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபதத்துக்கு நீர் கொண்டு வருதல்வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக்கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்ததாமல் உமது மேசை மேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கவனிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முடி[illegible]டக்கும் பின்னர் ஒரு கோடுகீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும் விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள் கோட்டுருபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக்காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும்வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத்தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2.

9–629—21.09.73 ந் திகதிய வர்த்தமானிப் இல. 78

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பினால் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9 73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யு. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்,

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பட்டது.